1990 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவில் பெண்களுக்கான இந்தக் கமிஷன் அமைப்பதற்கு முன்பே தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையிலே பெண்களுக்கு 30 சதவீதம் தரவேண்டும் என்று சொல்லியிருந்ததை இந்த அரசு நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டது. ஏனென்றால் தேசிய முன்னணி அரசு கடந்த 5, 6 மாதங்களுக்கு முன்புதான் பொறுப்புக்கு வந்தது. தேசிய முன்னணியிலே அங்கம் வகிக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு 1989-ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்ட காரணத்தால் தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையில் உள்ள பெண்களுக்கு 30 விழுக்காடு என்பதை, தொடர்ந்து, கடந்த காலத்திலே இருந்து-ஓராண்டு காலத்திற்கு மேலாக அமல்படுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன, மாநில அளவிலே இந்தக் கமிஷன் அமைப்பதைப் பற்றி, மத்தியிலே இந்தக் கமிஷன் அமைந்ததையொட்டி யோசிக்கப்படும்.

வி. ஐ. பி.க்களின் பாதுகாப்பிற்காகத் தனியாகப் பாதுகாப்புப் படை அமைத்தல்

*6632. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வி. ஐ. பி-க்களின் பாதுகாப்பிற்காக தனியாக பாதுகாப்புப் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

வி. ஐ. பி.க்களின் பாதுகாப்பிற்காகத் தனியாக பாதுகாப்புப் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் பரிசீலனையில் இல்லை.

விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரி

*8141. டாக்டர் து. திருமூர்த்தி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசினர் தரப்பில் கோவளம் அருகில் விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?